III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.19/2013

Deposition of witness for the Defendant/DW2
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 06-10-2023

| | | | |
|---|---|---|---|
| Name | : S.Sowdhara Rajan | Caste | : |
| Father's Name | : Sundaram | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். வாதி இவ்வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. இருவரின் இடமும் வெவ்வேறானவை. கமல கண்ணனினுடைய இடம் சென்னீர்குப்பம் கிராமத்தில் உள்ளது. மனை எண் மற்றம் புல எண்கள் எனக்கு தெரியாது. வாதியினுடைய இடம் CMDA அனுமதிக்கப்பட்ட இடத்தில் உள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியினுடைய இடத்தின் விஸ்தீரணம் 1550 சதுர அடி. அந்த இடம் பிரதிவாதிக்கு எப்படி சொந்தமானது என்பது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் இடம் சென்னீர்குப்பத்தில் உள்ளது அதன் புல எண் எனக்கு தெரியாது. பிரதிவாதி அவரது இடத்தில் 2, 3 வீடுகள் கட்டியுள்ளார். அந்த இடம் இன்னும் பிரதிவாதியிடம் தான் உள்ளது. பிரதிவாதியின் இடம் எனது வீட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனது வீட்டின் சர்வே எண் எனக்கு நினைவில்லை. பிரதிவாதி இடத்தின் தெற்கு மற்றும் வடக்கு பக்கத்தில் வீடு உள்ளது. கிழக்கு மற்றும் மேற்கு பக்கத்திலும் வீடு உள்ளது. அந்த இடத்தை தவிர பிரதிவாதிக்கு மேற்கூறிய 1550 சதுர அடி தவிர வேறு இடம் எதுவும் கிடையாது. வாதியின் இடத்தின் நான்கு எல்லைகள் எனக்கு தெரியாது. வாதி அவரது இடத்தை எந்த வருடத்தில் வாங்கினார் என்பது எனக்கு தெரியாது. நான் தற்போது வசித்து வரும் வீட்டில் கடந்த 48 வருடமாக வசித்து வருகிறேன். பிரதிவாதியை எனக்கு கடந்த 45 வருடங்களாக எனக்கு குடும்ப ரீதியாக தெரியும். வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. நான் தற்போது

வசித்து வரும் சொத்தை எனது தாயார் 2019 ல் எனது பெயருக்கு எழுதி வைத்தார். அந்த பத்திரத்தில் பிரதிவாதி சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு பற்றிய விவரம் எதுவும் தெரியாது என்றும் பிரதிவாதி எனக்கு தெரிந்தவர் ஆகையால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதியின் இடத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும் எனது பெயரில் உள்ள செட்டில்மென்ட் பத்திரத்தில் பிரதிவாதி சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேலே சொல்லியுள்ள 1550 சதுர அடி அடத்தில் தான் தற்போது பிரதிவாதி தங்கியுள்ளார். மேலும் பிரதிவாதியின் மனைவி, நான்கு மகன்கள் மற்றும் ஒரு மகள் ஆகியோர் அவருடன் அங்கு தங்கியுள்ளனர். பிரதிவாதியின் பெற்றோர்கள் 25 வருடத்திற்கு முன்னர் இறந்துவிட்டனர். பிரதிவாதி ஒரு கம்பெனியில் **house keeping contract** எடுத்து தொழில் செய்து வருகிறார். பிரதிவாதி ஒரு அரசியல் கட்சியில் உள்ளார். வார்டு உறுப்பினராக அவர் இருந்தார். தாசில்தார் வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட இடத்தில் சர்வே செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கால காலமாக நான் அவர் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்து வருவதால் அவருக்காக சாட்சியம் அளிக்க வேண்டும் என்று என்னை அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரதிவாதி எனக்கு தெரிந்தவர் என்பதாகையால் நான் அவருக்காக அளித்துள்ள சாட்சி ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்றால் சரியல்ல.